இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 29-02-2024

# சதிகளை வெல்லும் சாதுர்யங்கள் - 1

சில நாட்களுக்கு முன்னால் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் 'தினமலர்' நாளிதழுக்கு ஒரு பேட்டி கொடுத்திருந்தார். வேறு யாருக்கு கொடுப்பார்? அந்த நாளிதழ் அதற்கு இட்டிருந்த தலைப்பு, **'சாதுர்யம் இருந்தால் தமிழகம் சாதித்து கொள்ளலாமே!'** என்பது ஆகும்.

**'தமிழ்நாட்டில் இருந்து வரி வாங்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசும் சாதுர்யம் இருந்தால் சாதித்துக் கொள்ளலாமே'** என்று நமக்கும் கேட்கத் தெரியும்.

சுயமாய் நிதி உருவாக்கத் தெரியாததால் மாநிலங்களின் நிதியை ஜி.எஸ்.டி.யாகச் சுரண்டிக் கொழுக்கும் ஒன்றிய அரசின் நிதித் துறை அமைச்சராக இருப்பவரால், மாநில வரிகள் இல்லாமல் அரசை நடத்த முடியுமா? நடத்தத் தெரியுமா? பூண்டு சாப்பிடாத புத்திசாலியால், வெங்காயம் சாப்பிடாத அறிவாளியால் இது முடியுமா?

நிதி அமைச்சகப் பணியே நிதிப் பகிர்வுதான். இந்த அடிப்படையே தெரியாதவர் ஒன்றிய நிதி அமைச்சராக இருக்கிறார். அண்ணாமலைகள், ஆர்.என்.ரவிகள், நிர்மலா சீதாராமன்கள் போதாதா பா.ஜ.க.வின் ஒன்றரை அணா வாக்கு வங்கியை ஒழிக்க! அதற்குத்தான் உதவும் இந்தப் பேட்டிகள்!

தேர்தல் என்பதால் இவர்களை பேச வைக்கிறார்கள். தேர்தல் நேரத்தில் இவர்களை பேச வைக்காமல் இருப்பதுதான் அந்தக் கட்சிக்கு நல்லது என்ற அடிப்படையில் இருக்கிறது அந்தப் பேட்டி.

தூத்துக்குடி நிகழ்ச்சியில் இந்தப் பேட்டிக்கு மிகச் சரியான பதிலை கொடுத்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். **"உங்களிடம் சாதுர்யம் இருந்தால் நீங்கள் சாதித்துக் கொள்ளலாமே என்று மிக ஆணவமாக அவர் பேட்டி அளித்துள்ளார். இது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல. எங்களிடம் சாதுர்யம் இருப்பதால் தான் இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை ஆக்கிக் காட்டி இருக்கிறோம்.தொழில் தொடங்குவதற்கு தமிழ்நாட்டை நோக்கி உலகப் புகழ் பெற்ற நிறுவனங்கள் வர என்ன காரணம்? எங்களது வளர்ச்சியைப் பார்த்துதானே வருகிறார்கள். அனைத்துத் துறையிலும் முதலிடத்தை நோக்கி முன்னேறிக் கொண்டு இருக்கிறது தமிழ்நாடு. இவரைப் போன்ற இடைக்காலத் தடைகளையும் தாண்டித்தான் இந்த வெற்றியை பெற்று வருகிறோம்."** என்று சொல்லி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

சட்டமன்றத்தில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசின் சாதனைகளை முழுமையாகப் பட்டியலிட்டாரே! இவை அனைத்தும் பா.ஜ.க.வின் சதிகளை வென்ற சாதுர்யங்கள் தானே!

* இந்தியாவின் பொருளாதாரத்துக்கு 9 விழுக்காடு பங்கைத் தருவது தமிழ்நாட்டின் பொருளாதார வளமாக இருக்கிறது.
* இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவில் இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது.
* ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சி 7.24 விழுக்காடாக இருக்கும் போது - தமிழ்நாட்டின் வளர்ச்சியானது 8.19 விழுக்காடாக இருக்கிறது.
* இந்திய அளவில் பணவீக்கமானது 6.65 விழுக்காடாக இருக்கும் போது - தமிழ்நாட்டில் அது 5.97 விழுக்காடாக இருக்கிறது. தேசிய சராசரியை விட தமிழ்நாட்டின் பணவீக்கம் கட்டுக்குள் இருக்கிறது.
* ஏற்றுமதி தயார் நிலைக் குறியீட்டில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது.
* தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக 14 ஆவது இடத்தில் இருந்து 3 ஆவது இடத்துக்கு தமிழ்நாடு உயர்ந்து வந்துவிட்டது.
* கல்வியில் இரண்டாவது இடத்துக்கு தமிழ்நாடு வந்துவிட்டது.
* புத்தாக்கத் தொழில்கள் வரிசையில் தமிழ்நாடு முதலிடத்துக்கு வந்துவிட்டது. - இவை அனைத்தும் தமிழ்நாடு அரசின் சாதுர்யத்தால் அடைந்த சாதனைகள்தான். பா.ஜ.க. அரசின் சதிகளை வென்று அடைந்த சாதுர்ய சாதனைகள்தான்.

நிதிப்பற்றாக்குறை என்பது 3.5 விழுக்காட்டுக்குள் இருக்க வேண்டும். அந்த வரம்புக்குள்தான் தமிழ்நாடு அரசு இருக்கிறது. உள் கட்டமைப்புக்காக ஒரு மாநில அரசு எவ்வளவு செலவு செய்கிறது என்பது அந்த மாநிலத்தின் வளத்தைக் காட்டும். அந்த வகையில் கட்டமைப்புக்காக 47 ஆயிரம் கோடியைச் செலவு செய்யும் அளவுக்கு நிதி வளம் தமிழ்நாடு அரசுக்கு இருக்கிறது.

அதேபோல் மாநிலத்தின் வரி வருவாய் எப்படி இருக்கிறது என்பதும் அந்த மாநிலத்தின் நிதி வளத்தின் அடையாளம் ஆகும். நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் அவர்கள் அளித்துள்ள பேட்டியில் இதனை விளக்கிச் சொல்லி இருக்கிறார்.

**"நம்முடைய சொந்த வரி வருவாயில் 15 விழுக்காடு வளர்ச்சியை எதிர் பார்க்கிறோம். பத்திரப் பதிவுத் துறையில் அதிக வளர்ச்சி இருக்கும். மற்ற வரி வருவாயில் அதிகளவு நிதி வரும் என எதிர்பார்க்கிறோம். வணிக வரி, பத்திரப் பதிவுத் துறையில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அவை வரும் நிதி ஆண்டில் நல்ல பலனைத் தரும்"** என்று சொல்லி இருக்கிறார்.

ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வானது 6.66 விழுக்காடாக இருந்து இப்போது 4.08 ஆக குறைந்து விட்டது. அதற்கு நிர்மலா சீதாராமன் பதில் சொல்ல வேண்டும்.

இரண்டு பெரும் வெள்ளம் காரணமாக நாம் கேட்ட 37 ஆயிரம் கோடியில் ஒரு பைசா கூட வரவில்லை. அதற்கு அமைச்சர் நிர்மலா சீதாராமன் பதில் சொல்லி இருந்தால் பாராட்டலாம்.

ஒன்றிய அரசிடம் இருந்து வரவேண்டிய மானியங்கள், நாளுக்கு நாள் குறைந்து கொண்டே இருக்கின்றன. அதற்கு அவர் நியாயமான காரணங்கள் சொல்லி இருக்க வேண்டும்.

- தொடரும் -






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (27.02.2024) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 12 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 கோட்டாட்சியர் குடியிருப்புகள், 1 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், 1 வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, 4 வட்டாட்சியர் குடியிருப்புகள், 13 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள், 1 கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் ஆகிய கட்டடங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே. பிரபாகர், சமூக பாதுகாப்பு திட்டம் (மு.கூ.பொ). ஆணையர், தாரேஸ் அகமது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே.ராஜாராமன், வருவாய் நிருவாக கூடுதல் ஆணையர் டாக்டர் எஸ். நடராஜன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## தமிழ்நாட்டுக்கு அநீதி இழைக்கும் பா.ஜ.க.- அ.தி.மு.க.வை வீழ்த்திடும் வகையில்

# கழக அரசின் சாதனைகளை திண்ணைப் பிரச்சாரம் செய்வோம்!

### கரூர் மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

கரூர், பிப். 29-

தமிழ்நாட்டுக்கு அநீதி இழைக்கும் பா.ஜ.க. அ.தி.மு.க.வை வீழ்த்திடும் வகையில்கழக அரசின் நிதி நிலை அறிக்கையின் சிறப்பு திட்டங்களை விளக்கிடும் வகையில் மாவட்டம் முழுவதும் திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்வது என கரூர் மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கரூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் கரூரில் கரூர் மாவட்டக் கழக அலுவலகம், (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கத்தில் கரூர் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில் கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி ஆலோசனைபடி நடைபெற்றது.

கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், மாநில நிர்வாகிகள் வே.பல்லவி ராஜா, பி.விஜயக்குமார்,

குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மீனா ஜெயக்குமார், கரூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பணப்பட்டி கே.தினகரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள், எம்.எஸ். கே.கருணாநிதி, மகேஸ்வரி சுப்பிரமணி, பூவை ரமேஷ் பாபு, பொருளாளர் பி.வி. பரத் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சுபராஜ கோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி கழக பொதுக்குழு உறுப்பினர்கள் வி.கருப்பண்ணன், என். எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, விகே.டி.ராஜ்கண்ணு, பி.பி.சரவணன் சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம். சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார்.

கரூர் மாநகர கழக செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், கரூர் தெற்கு பகுதி கழக செயலாளர் க.சுப்பிரமணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதி செயலாளர் ஆர்.எஸ்.ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதி பொறுப்பாளர் ஆர்.ஜோதிபாசு, கரூர் மத்திய பகுதி பொறுப்பாளர் வி.ஜி.எஸ். குமார், ஒன்றிய செயலாளர்கள் அரவக்குறிச்சி மேற்கு எம்.எஸ்.மணியன், மணிகண்டன், கே.கருணாநிதி, கார்த்திக், சி.வளர்மதி, வீ.கே.வேலுச்சாமி, ப.முத்துக்குமார், எம். ரகுநாதன், கே.பாஸ்கரன், கே.ரவிராஜா, எம்.ராமலிங்கம், கே.வீராசாமி (எ) சுதாகர், என்.செல்வராஜ், சி.கதிரவன், எல்கரிகாலன், அ.சந்திரன், ப.தியாகராஜன், இ.ராமர்(முன்னாள் எம்.எல்.ஏ.), ஜி.அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர கழக பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, ப செயலாளர் ஏ.குணசேகரன், பேரூர் செயலாளர்கள் க.முரளி ராஜா, கா.அம்மையப்பன், சி.தங்கராஜ், எம்.சசிக்குமார், பழைய ஜெயங்கொண்டம் ஆர்மோகன் ராஜ், இரவீந்திரன், எம். முத்து (எ) சுப்பிரமணி முன்னாள் எம்எல்ஏ எஸ்.காமராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டில் அரசு பள்ளியில் பயின்று உயர் கல்வியில் சேரும் மாணவர்களுக்கு மாதம் ரூ. 1000 வழங்கும் திட்டத்தில் 3 லட்சம் மாணவர்கள் பயன் பெறும் "தமிழ் புதல்வன் திட்டம்" அறிமுகம்.

ஏழை, எளிய மாணவிகள் உயர்கல்வி பயிலும் வகையில் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண்திட்டத்தின் மூலம் 34 சதவீதம் அதிகரித்து மகளிர் கல்வி தரம் உயர்ந்துள்ளது. இந்த நிதியிலை அறிக்கையில் இத்திட்டம் அரசு உதவிப்பெறும் பள்ளியில் தமிழ் வழி பயிலும் மாணவிகளுக்கும் விரிவுப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வறுமையில் இருக்கும் 5 லட்சம் குடும்பங்களை கண்டறிந்து மீட்கப்படும் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்".

இன்னுயிர் காப்போம் 48 திட்டத்தின் கீழ் விபத்து நடந்த முதல் 48 மணிநேரத்தில் வழங்கப்படும் இலவச சிகிச்சைக்கான உச்சவரம்பு 1 லட்சத்தில் இருந்து 2 லட்சமாக உயர்த்தப்பட்டது.

ரூ.20 கோடியில் கரூர், ஈரோடு, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் 10 சிறிய ஜவுளி பூங்கா அமைக்கப்படும்

1 லட்சம் மாணவர்களுக்கு ரூ.2500 கோடி கல்வி கடன் வழங்கிட அரசு உறுதி செய்யும்.0இல்லம் தேடி கல்வித் திட்டத்திற்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு

"கலைஞரின் கனவு இல்லம் திட்டம்" 2030ம் ஆண்டுக்குள் 8 லட்சம் கான்கீரிட் வீடுகள் கட்டித்தரப்படும். முதல் கட்டமாக 2024-2025ம் ஆண்டில் 1 லட்சம் கான்கிரிட் வீடுகள் கட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.3.5 லட்சம் செலவில் உருவாக்கப்படும் வீடுகளை பயனாளிகள் தாங்களாகவே உருவாக்கலாம். இந்தாண்டு ரூ.3500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வரும் நிதியாண்டில் புதிதாக 10,000 சுயஉதவி குழுக்கள் உருவாக்கப்படும். மேலும் இந்த நிதியாண்டில் 35,000 கோடி வங்கி கடன் வழங்க இலக்கு நிர்ணக்கப்பட்டுள்ளது.

மகளிருக்கான இலவச பேருந்து பயணத் திட்டத்திற்கு ரூ. 3,050 கோடி நிதி ஒதுக்கீடு ஊரக பகுதிகளில் இயங்கி வரும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 2 லட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் பயனடையும் வகையில் இந்த கல்வி ஆண்டு முதல் விரிவு படுத்தப்படும். காலை உணவுத் திட்டத்திற்கு ரூ. 600 கோடி நிதி ஒதுக்கீடு என வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கிய திராவிட மாடல் நாயகன், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பாகவும், கரூர் மாவட்ட மக்களின் சார்பாகவும் கோடான கோடி நன்றிகளை இக்கூட்டத்தின் மூலம் தெரிவித்துக்கொள்கிறது.

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மாவட்டச் செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் காணொலி காட்சி வாயிலாக 23.02.2024 அன்று நடைபெற்றக் கூட்டத்தில்

1. திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டு சாதனைகளையும், தமிழ்நாடு அரசின் 2024-2025ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சங்களையும் வீடு தோறும் கொண்டு சேர்க்கவும், அதே சமயத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்கும், தமிழுக்கும் தமிழர்களுக்கும் செய்து வரும் அநீதிகளைத் தமிழ்நாட்டில் எடுத்துரைக்கும் வகையில் பிப்ரவரி 26ஆம் தேதி முதல் "இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்" என்ற தலைப்பில் திண்ணைப் பிரச்சாரத்தை தொடங்க வேண்டும் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் 26.02.2024 அன்று ஆரம்பிக்கும் திண்ணைப் பிரச்சாரம் மாலை நேரங்களில் பூத் கமிட்டியினர், பி.எல்.ஏ2, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகளுடன் சேர்ந்து ஒவ்வொரு வீடாகச் சென்று துண்டறிக்கைகளை வழங்கி, ஒவ்வொரு வீட்டில் உள்ளவர்களிடமும் இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் என்ற பரப்புரை குறித்து சில நிமிடங்கள் விளக்கி, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க மற்றும் அதனோடு மறைமுக கூட்டணியில் இருக்கும் அ.தி.மு.க.வை முழுமையாக வீழ்த்திடும் வகையில் திண்ணைப் பிரச்சாரம் இருக்க வேண்டும் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

மார்ச் 1ம் தேதி நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் திராவிட நாயகன் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71ஆம் ஆண்டு பிறந்த நாளில் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் சார்பிலும், மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக சார்பு அணிகளின் சார்பாகவும், பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் வார்டு கழகங்கள், கிளைக் கழகங்கள் சார்பாகவும் மக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக கொண்டாடுவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

மார்ச் 1 ஆம் தேதி திராவிட நாயகன், கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாளை முன்னிட்டு மார்ச் 2 மற்றும் 3 ஆம் தேதிகளில் மாநகராட்சி, நகராட்சிகளில் தலைமை கழகம் அறிவிப்பின்படி பொதுக்கூட்டம் நடத்துவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது. என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## செஞ்சி ஒன்றியம் பொன்னங்குப்பம் ஊராட்சியில்

# "இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல்" துண்டு பிரசுரங்கள்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

செஞ்சி, பிப்.29-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 33 மாத ஆட்சியின் சாதனைகளையும் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையினையும் இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் தி.மு.க.வினர் கிராமங்களுக்குச் சென்று ஒவ்வொரு வீடாக திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும்என தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டார்.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றியம் பொன்னங்குப்பம் ஊராட்சியில் இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் திண்ணை பிரச்சாரத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற திண்ணை பிரச்சாரத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்று தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களையும் நிதிநிலை அறிக்கையின்துண்டு பிரசுரங்களை வீடு வீடாகச் சென்று வழங்கியும்,ஒவ்வொரு வீட்டின் திண்ணையில் அமர்ந்து திராவிட மாடல் ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியில் செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா, ஒன்றிய கவுன்சிலர் அலமேலு கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாபு உதய சிங், நிர்வாகிகள் நாகராஜன், பழனி, சண்முகம், குமரவேல், தேவராஜ், நாராயணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கரூர் மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கில், மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி மாவட்ட அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.